**<u>19.02.2026</u>**

**<u>MCOP. No.153/2019</u>**

**<u>ம.சா. 1 – திருமதி.அனுசுயா.</u>**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 11.53 மு.ப</u>**

விபத்தின்போது நான் எனது கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தேன். என்னுடன் எனது மகளும் பயணம் செய்தார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்தால் அது சட்ட விதிமீறல் என்றால் ஆனால் எனது குழந்தைக்கு ஒரு வயதுதான் ஆகிறது. எனது கணவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரும் காப்பீட்டாளரும் இவ்வழக்கில் அவசிய தரப்பினர் என்றால் உரிமையாளரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன். மேற்படியான இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எனது கணவர் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இந்நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி MCOP 151/2019 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது போல் எனது மகளுக்கும் MCOP 152/2019 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தானது 1ம் எதிர்மனுதாரின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டிச் வந்தார் என்றால் சரியல்ல. விபத்தின்போது நான் மாதம் ரூ.15,000/– வருமானம் ஈட்டி வந்ததற்கு எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தினமும் விவசாய சார்ந்த கூலி வேலைக்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான். அங்கு எனக்கு வழங்கப்படும் சம்பளத்திற்கு எந்த விதமான இரசீதோ ஆவணமோ பொதுவாக கிராமங்களில் பராமரிக்கப்படுவது இல்லை என்றால் சரிதான். பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு தொகையானது எனது கணவர் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும்


Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.19
14:37:22 +0530

சாலையில் என்னையும் எனது மகளையும் ஏற்றிக்கொண்டு சென்ற காரணத்தினால் விபத்து ஏற்பட்டது என்றாலும் நான் வருமானம் ஈட்டி வருவதற்கு எந்த விதமான ஆவணமும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாத காரணத்தினால் நான் மனுவில் கூரிய பரிகாரம் முழுமையாக எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றாலும் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.07 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.02.19 14:37:27 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 19.02.2026